பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி அண்ணனூர் ஜோதி நகர் பகுதியில் தேங்கியிருக்கும் மழை தண்ணீரை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டு மழை நீரை வெளியேற்றுவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர். உடன் மாநகர மேயர் ஜி. உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் மண்டல குழு தலைவர் ராஜேந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி கூட்டுறவு

சர்க்கரை ஆலையில் 2025-26ஆம் ஆண்டுக்கான கரும்பு அரவை!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்! திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, பங்கேற்பு.!

திருவள்ளூர் அக் 25:-

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2025-26 ஆண்டு பருவ கரும்பு அரைவை துவக்க விழா நடைபெற்றது

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு கரும்பு அரவை இயந்திரத்திற்குள் கரும்பு கட்டுகளை வைத்து துவக்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு விவசாயிகளுக்கு இனிப்பு வழங்கினர்

அப்போது அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு என்று தனி துறை ஒதுக்கி அவர்களுக்கு சிறப்பு சேர்த்து அதன் அடிப்படையில் விவசாயிகள் வாழ்வாதாரத்தை உயர்த்தப்பட வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளோடு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்த காலத்தில் நமக்கு இலவச மின்சாரத்தை அறிமுகப்படுத்தினார். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு கொடுத்த முன்னுரிமையின் அடிப்படையில் 2024-25 ஆண்டு 1.55 இலட்சம் டன் கரும்பு வரத்து இருந்தது. ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்த ஊக்கத்தினால் இன்றைய தினம் 2051 விவசாயிடமிருந்து 7505 ஏக்கர் நிலப்பரப்பில் 2.00 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி உயர்ந்துள்ளது. அந்த அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான ஆட்சியை கொடுத்திருக்கிறார். சில கோரிக்கைகளை விவசாயிகள் முறையிட்டனர் அக்குறைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருத்தணி சட்ட உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்து அக்குறைகளை துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சரிடம் தெரிவித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நேரடி பார்வைக்கு எடுத்துச் சென்று விவசாயிகளின் தேவைகளுக்கு உரிய தீர்வு காணப்படும். அடுத்த ஆண்டு இன்னும் மிக சிறப்பான மகசூல் இருக்கும் என்றும் அதில் வெற்றி பெற வேண்டும் என்று விவசாயிகளுக்கு வாழ்த்துகளை தெரிவிக்கிறேன் என்று சிறுபான்மையி னர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், கூட்டுறவு சர்க்கரை ஆலை இணைப்பதிவாளர் / செயலாட்சியர் அ.மீனா அருள், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். ராஜா மற்றும் கரும்பு விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வளசரவாக்கம் மண்டலம், மதுரவாயலில்

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம்!

இன்று நடைபெறுகிறது!

சென்னை,அக்.25-

பெருநகர சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் மண்டலம், மதுரவாயல், ஸ்ரீ வெங்கடடேஸ்வரா நகர், மேட்டுக் குப்பம் சாலையில் உள்ள பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இன்று (25.10.2025 (சனிக்கிழமை)) "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் ஏழாவது கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்தியமுறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 துறைசார் நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, காசநோய், தொழுநோய் பரிசோதனை, ஆரம்ப புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதலமைச்சரின் விரிவாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்படுகிறது.

வளசரவாக்கம் மண்டலம், மதுரவாயல், ஸ்ரீ வெங்கடடேஸ்வரா நகர், மேட்டுக் குப்பம் சாலையில் உள்ள பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இன்று (25.10.2025) நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில்,புனித தோமையார் மலை ஒன்றிய உறுப்பினர் மதுரப்பாக்கம், அகரம்தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம் அமுதாவேல்முருகன் பொது நிதியில் இருந்து, முதல் தவணையாக ரூ.16.இலட்சம் மதிப்பீட்டில் கோவிலஞ்சேரி குளத்தை சீரமைத்து தூர்வாரும், பணிகளை எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு செய்தார். மேலும் சீரமைக்கும் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்கினார். உடன் மதுரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன், மதுரப்பாக்கம் செயலாளர் இரா.சந்தானம் அரசு அலுவலர்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் பங்கேற்றனர்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதி 49–வது வார்டுகளுக்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும், வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை, மழைநீர் வடிகால் அமைப்புகளை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் பகுதிச் செயலாளர் இரா. செந்தில் குமார், வட்டச் செயலாளர் காட்டன் சதீஸ் குமார், கலைச் செல்வன் மற்றும் எல்.சீனிவாசன், பிரேம் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம் பெரியாபாளையம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ஜெ.மூர்த்தி, ஏ.வி.ராமமூர்த்தி, கா.சு.ஜெகதீசன் கே.வி.லோகேஷ், வி.பி.ரவிகுமார், டி.சங்கர், என். ரவிசந்திரன், எம்.முனுசாமி, கா.சம்பத், ஜெயலலிதாசசிதரன், ஜி.சுமன், முகமதுமொய்தீன், டி.ரவி, சிவசங்கர், ஏ.சீனிவாசன், பி.கே. நாராயணன், டி.சண்முகம், டி.வெங்கடேஷ், இ.ஜி.பார்த்திபன், எஸ்.பாபு, வேதமூர்த்தி, டில்லிசங்கர், செங்கரைபெருமாள், தேர்வாய். முனிவேல், வேலு. ஐ.ராஜா, செங்குட்டுவன், சந்திரசேகர், எம்.அன்பு, பன்னீர், மூர்த்தி, ரீஜி, குப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிள் உள்ளனர்.

அக்டோபர் 27 முதல் 31 வரை – உலக கடல்சார் உச்சி மாநாடு:

மும்பையில் இந்திய கடல்சார் வார விழா - தமிழ்நாடு பங்கேற்பு!

சென்னை, அக்.25-

மும்பையில் நடைபெறும் மத்திய கப்பல், துறைமுகங்கள் மற்றும் நீர்வழிகள் துறை சார்பில் அக்டோபர் 27 முதல் 31 வரை நடைபெறும் இந்திய கடல்சார் வாரம் 2025 மற்றும் உலக கடல்சார் உச்சி மாநாட்டில் (Global Maritime Summit 2025), தமிழ்நாடு அரசு சிறப்பாக பங்கேற்க உள்ளது.

தமிழ்நாடு 1,069 கிலோமீட்டர் நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது. இதில் ஒன்றிய மற்றும் மாநில துறை முகங்கள், கடலோர தொழிற்சாலைகள், சுற்றுலாத்தளங்கள் மற்றும் தொழில் மையங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் வணிகச் சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி, மீன்வளம், தொழில் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு பெரும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல்சார் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. உள்நாட்டிலேயே கப்பல் கட்டுதலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசின் முயற்சிக்கு இணங்க, தூத்துக்குடி மற்றும் கடலூர் துறைமுகங்கள் வழியாக தமிழக தொழில்துறை முன்னெடுப்பு மேற்கொண்டுள்ளது. இதற்காக தூத்துக்குடி துறைமுகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தாகியுள்ளது.

பண்டைய காலத்திலிருந்தே தமிழ்நாடு கப்பல் கட்டுதல் மற்றும் கடல்வழி வணிகத்தில் சிறந்து விளங்கியதற்கான வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன. இன்று ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு நோக்கி நகரும் தமிழகம், கடல்வழி வணிகம் மற்றும் நீலப்பொருளாதாரம் (Blue Economy) துறையில் வளர்ச்சி அடைய உறுதியாக செயல்படுகிறது.

தமிழ்நாட்டின் கடல்சார் திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில், 18 செப்டம்பர் 2025 அன்று சென்னையில் "நீலப் பொருளாதார மாநாடு - 2025" வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தேசிய அளவில் நடைபெறும் இந்திய கடல்சார் வார விழாவில், தமிழ்நாடு முக்கிய பங்காற்றுகிறது.

இந்நிகழ்ச்சியில், 100க்கும் மேற்பட்ட கடல்சார் நாடுகளின் பிரதிநிதிகள், தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்கின்றனர். உலகளாவிய கடல்சார் வளர்ச்சியை முன்னிலைப்படுத்தும் நோக்கத்துடன், புதிய தொழில்நுட்ப புதுமைகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் நவீன கொள்கைகள் இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

தமிழ்நாட்டின் சார்பில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு எ.வ.வேலு அவர்கள்தலைமையில்,

தொழில்துறை அமைச்சர், கடல்சார் வாரியம், தொழில் துறை மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த உயர் அதிகாரிகள் கொண்ட குழு பங்கேற்க வுள்ளனர்.

இக்குழு தமிழ்நாட்டின் கடல்சார் வர்த்தகம், தொழில், நீலப்பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சியை முன்னெடுத்து, முதலீட்டாளர்களை ஈர்க்கும் நோக்கத்துடன் காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வணிக அமர்வுகள் நடத்தவுள்ளது.

தமிழ்நாட்டின் கடல்சார் திறன்கள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பண்டைய கடல் வழி மரபு அனைத்தும், ஒருங்கிணைந்து இவ்விழாவில் வெளிப்படுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

"அன்னம் தரும் அமுதகரம்" 247 வது நாள்!

அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,அக்.25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 247 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (24.10.2025), அம்பத்தூர் கிழக்குப் பகுதி: 1) கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், 2) வட்டம் 84 ஆ, தொடர் வண்டி சாலை, பெரியார் நகர், கொரட்டூர். சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்.

தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு. தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - ஜி. வினோபா 41/122, செவலை ரோடு, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜி. வல்லபன் 36, தென்னமாதேவி, டி. மேட்டுப்பாளளையம் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - காசி. கலைச்செல்வன் 41எப், காமராஜர் தெரு, வி. சாலை மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ராஜ்மோகன் மண்டகமேடு, இளந்துரை மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) பெ. பாரதி காமாட்சி அம்மன் கோவில் தெரு, தி. கொசப்பாளையம், அன்னியூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) சிவ. ஏழுமலை 3/27, வடக்கு தெரு, செம்மார் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம் - 607109, விழுப்புரம் மாவட்டம். 4) ரா. ஞானவேல் 1/4, நடுத் தெரு, டி. அத்திவாக்கம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) சி. அண்ணாதுரை சித்தேரி மெயின் ரோடு, சித்தேரி போளூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 24-10-2025.

வாகை சந்திரசேகர்
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

வட கிழக்கு பருவமழை காரணமாக பொதட்டூர்பேட்டை புதுத் தெருவில் வீடு இடிந்து விழுந்து சுசீலா என்பவருக்கு பலத்த காயம் அடைந்து மாவட்ட அரசு தலைமை மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பாதிக்கப்பட்டவரை நேரில் சென்று ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கி அவசர உயர் சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களிடம் கூறி இடிந்து விழுந்த வீட்டை பார்வையிட்டார். உடன் ஒன்றிய நகரச் செயலாளர்கள் திருத்தணி வி.வினோத்குமார், டி.ஆர். கே. பாபு, நிர்வாகிகள் ஜி.எஸ்.கணேசன், ஷாம்சுந்தர், கே.எஸ். அசோக் குமார், ஜி.சித்திக் அலி, எஸ்.குமரன், சஞ்சய், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.